தான் பயன்படுத்துகிறோம். காரணம் என்னவென்றால், ஒரு ஆண்டிலே மட்டும் அதை எடுத்துவிட வேண்டுமென்றால், அதற்கான கூடு வித்தியாசமானது, அதை மீண்டும் உடைத்து வேறுவகையில் பயன்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும், நான் ஏற்கனவே சொன்னதைப் போல அதற்கான கட்டணத்தைத் தேவையான அளவிற்கு உயர்த்தலாம் என்பதை ஒத்துக்கொண்டால், ஒரு ஆண்டுக்கு ஒரு முறை என்ன, ஆறு மாதங்களுக்கு ஒருமுறைகூட நாங்கள் மாற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் வழங்கல்.

வினா எண் 98—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தி, பட்டு நூல்களை மலிவு விலையில் நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத்துறை அமைப்பின்கீழ் செயல்பட்டு வரும் நெசவாளர்களுக்கு பருத்து மற்றும் பட்டு நூல்கள் நியாய விலையில் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறைக்கு வெளியே உள்ள நெசவாளர்களுக்கு நியாயவிலையில் பருத்திநூல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கு நியாயவிலையில் பட்டுநூல் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது; ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு மட்டும் நெசவாளர் சங்கங்களுக்குக் கூட்டுறவு நூற்பாலைகள் கொடுத்துவிட்டு, தனிப்பட்ட வியாபாரிகளுக்கு மீதியைக் கொடுக்கிறார்கள். அதையும் தேக்கிவைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கே குறைந்த விலைக்கு நூலைக் கொடுப்பதற்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல தமிழ்நாட்டிலுள்ள 12 நூற்பு நிலையங்கள், 21 விற்பனை நிலையங்கள் வாயிலாக 1,052 சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல தனியாருக்கு விற்பனை செய்வதாக இதுவரையில் அரசுக்குத் தகவல் இல்லை. அப்படி ஏதாவது குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால் தனிப்பட்ட முறையில் அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, பெங்களூர் பட்டுநூலைத் தமிழகத்தில் விற்கும்பொழுது அதிக விலைக்கு விற்கிறார்கள். எனவே, குறைந்த விலைக்கு வாங்கி, மானியம் கொடுத்தாவது பட்டு உற்பத்தியைப் பெருக்கத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பட்டுநூல் நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு என்றே 14,000 கிலோ கச்சாப்பட்டு தேவைப்படுகிறது. விலையில் மாறுபாடு இருந்தாலும் நெசவாளர் சங்கங்களுக்குத் தரமான கச்சாப்பட்டு ஜரிகையும், கச்சாபட்டும் கொடுத்து வருகிறது, பெங்களூரில் இருந்து இங்குள்ள நெசவாளர் களுக்குத் தேவையான பட்டுநூல் நியாயமான விலைக்குக் கொடுக்கப்படுவது இல்லை என்று சொல்லி அங்கிருந்து இறக்குமதி செய்தால் அவர்களுக்குக் குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்ற கருத்தைக் கூறினார்கள். அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, சமீபத்தில் நூல் விலையேற்றத்தின் காரணமாக கரூர், மதுரை, குடியாத்தம் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வேலை கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவரவர்களே, நியாய விலையில் கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன. கூட்டுறவு இயக்கங்களாகச் செயலபடும் நெசவாளர்களுக்கு நியாய விலையில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தனியார் நெசவாளர்களுக்கு நியாய விலையில் கொடுப்பதற்கு மத்திய அரசு உதவியோடு 1978–79ஆம் ஆண்டில் செயல்பட்டு வந்தது. அதைப் போல் மீண்டும் மத்திய சர்க்காரின் உதவியோடு நியாய விலையில் தனியார் நெசவாளர் களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் மூலமாக கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல் நெசவாளர்

சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அதை மாற்றி நேரடியாக கூட்டுறவு நூற்பாலையிலிருந்து இந்த நூலை நெசவாளர் சங்கங்களுக்கு அளிப்பதன் மூலம் குறைந்த விலையில் கிடைக்க வழியிருப்பதால், நேரடியாக நூற்பாலைகள் நூலை விநியோகிக்கும் திட்டத்தை அரசு அமல் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகள் உற்பத்தி செய்கிற நூல்களை, நேரடியாக நெசவாளர்களுக்குக் கொடுத்து வந்தது சரியான முறை இல்லையென்பதால், தனியார் அவர்களோடு போட்டி போடக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அதைத் தலைமைச் சங்கமே கொள்முதல் செய்து, 21 சங்கங்கள் வாயிலாக 1,052 பிரதம சங்கங்களுக்கு—அதில் உள்ள நெசவாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மற்ற வெளியிடங்களில் கொடுப்பதைவிட, ரூ 3, ரூ 4 குறைவாகவே பிரதம சங்கங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, சில கிராமங்களிலே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருந்தும் அங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. அப்படிப்பட்ட கிராமங்களில் உள்ள நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் கிடைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இயங்கி வருகின்ற தனியார் நெசவாளர்களுக்கும் மற்றைய நெசவாளர்களுக்கும் சங்கங்களில் இயங்கி வருகின்ற நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற நியாய விலையில் கிடைப்பதைப் போன்ற ஏற்பாட்டை அரசு செய்து வருகிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண் 99—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் மத்திய அரசுடன் சேர்ந்து சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று புதிதாக ஆரம்பிக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பெரியார் மாவட்டத்தில் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது மஞ்சளின் விலை குறைவாக இருப்பதால் மஞ்சளைப் பயன்படுத்தி சாயத் தொழிற்சாலை வைப்பதற்கு. . .

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்